# க.பொ.த(சா/த)

# கடந்த கால பரீட்சை வினாத்தாள்கள்

# குடியியற்கல்வி

# (2016 – 2019)

# பகுதி I

தொகுப்பு :- திரு.நா.செல்வச்சந்திரன்

யா/அராலி இந்துக் கல்லூரி

0779356158

**2016**

01 கடந்த காலத்தில் நேரடி சனநாயக தத்துவங்களின் அடிப்படையில் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபட்ட அரசு

1 பிரித்தானியா 2 எதென்ஸ் 3 சுவிற்சர்லாந்து 4 இந்தியா

02 இலங்கைப் பிரசையொருவருக்கு வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான தகைமையைப் பெறும் வயதெல்லையாக கருதுவது அவர்

1 15 வயதைப் பூரணப்படுத்தியிருத்தலாகும் 2 18 வயதைப் பூரணப்படுத்தியிருத்தலாகும்

3 21 வயதைப் பூரணப்படுத்தியிருத்தலாகும் 4 24 வயதைப் பூரணப்படுத்தியிருத்தலாகும்

03 அரசொன்றின் அடிப்படைப் பண்புகளைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

1 நிலப்பரப்பு, சனத்தொகை, அரசாங்கம், சுயாதீனமான அதிகாரம்

2 நிலப்பரப்பு, அரசாங்கம், சுயாதீனமான அதிகாரம், எதிர்க்கட்சி

3 சனத்தொகை, சுயாதீனமான அதிகாரம், நீதித்துறை, அரசாங்கம்

4 சனத்தொகை, அரசாங்கம், சனாதிபதி, நிறைவேற்று அதிகாரம்

04 சனநாயக சமூகமொன்றின் பிரசையொருவரினால் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய இரண்டு வகையான கடமைகள்

1 சிவில் மற்றும் அரசியல் கடமைகள் ஆகும்

2 கலாசார மற்றும் சமயக் கடமைகள் ஆகும்

3 பொருளாதார மற்றும் சமூகக் கடமைகள் ஆகும்.

4 சட்ட மற்றும் ஒழுக்க ரீதியான கடமைகள் ஆகம்.

05 சனநாயக சமூகமொன்றில் ஆட்சி தொடர்பான விவகாரங்களை மேற்கொள்வதற்கு மக்களுக்கு இருக்க வேண்டிய அதிகாரம் அறியப்படுவது

1 வாக்குரிமை எனவாகும் 2 மீயுயர் அதிகாரம் எனவாகும்

3 இறைமை எனவாகும் 4 அரசியலமைப்பு அதிகாரம் எனவாகும்

06 மத்திய அரசிடம் உள்ள நிர்வாக அதிகாரத்தைப் பிராந்திய நிர்வாக அலகுகளுக்கு கையளித்தல் என்பது

1 அதிகாரத்தைப் பரவலாக்குதல் 2 அதிகாரத்தைப் பகிர்தலாகும்

3 அதிகாரத்தைக் கையளித்தலாகும் 4 அதிகாரத்தை நெறிப்படுத்தலாகும்.

07 கூட்டாட்சி அரசொன்றில் அதிகாரப் பகிர்வு நடைபெறுவது

1 சனாதிபதிக்கும் மத்திய அரசுக்கும் இடையிலாகும்.

2 சனாதிபதிக்கம் பிராந்திய அரசுகளுக்கும் இடையிலாகும்

3 மத்திய அரசுக்கும் பிராந்திய அரசின் ஆளுனருக்கும் இடையிலாகும்.

4 மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுகளுக்கும் இடையிலாகும்.

08 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாகாணசபையொன்றின் அமைச்சரவையானது முதலமைச்சர் உட்பட

1 நான்கு பேர்களைக் கொண்டது 2 ஐந்து பேர்களைக் கொண்டது

3 ஆறு பேர்களைக் கொண்டது 4 ஏழு பேர்களைக் கொண்டது

09 சுவிற்சர்லாந்து அரசியல் முறைமையில் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் போது பிரச்சினையான நிலைமை உருவாகுமாயின் அதனைத் தீர்க்கும் அதிகாரம் இருப்பது

1 தேசியசபைக்காகும் 2 கன்ரன் நீதிமன்றத்திற்காகும்

3 கூட்டாட்சி மகா சபைக்காகும் 4 கூட்டாட்சி சபைக்காகும்

10 பல்கலாச்சார சமூகமொன்றில் நல்லாட்சியின் காரணமாக ஏற்படும் முக்கியமான விளைவு

1 ஒருவரை ஒருவர் மதிக்கப் பழகுதல்.

2 பல அரச கரும மொழிகளைப் பயன்படுத்த உதவதல்.

3 பல்வேறு கலாசாரங்கள் பற்றிய விழிப்புணர்வைப் பெறமுடிதல்.

4 பல்வேறு இனப் பிரிவுகள் மற்றும் சமூகங்களுக்கிடையே பரஸ்பர நம்பிக்கையை உறுதி செய்தல்

11 மனித தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முற்படும் போது பிரச்சினைகள் தொன்றுவதற்கு முக்கிய காரணமாக அமைவது

1 தேவைகளை நிறைவேற்றுவதற்கான வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருத்தலாகும்.

2 நபருக்கு நபர் தெவைகள் வேறுபடுதல்.

3 தேவைகளை நிறைவேற்றுவதற்கான அறிவு போதுமானதாக இல்லாதிருத்தல்

4 தேவைகளை நிறைவேற்றுவதற்கான வசதிகள் போதுமானதாக இல்லாதிருத்தல்

12 பொருளாதாரம் அல்லாத பண்டமொன்றையும் பொரளாதாரப் பண்டமொன்றையும் ஒழுங்குமுறையில் காட்டும் சரியான விடை எது?

1 நீரும் உணவும் 2 நீரும் வளியும்

3 மருந்துகளும் சூரிய ஒளியும் 4 உடையும் உணவும்

13 பொருளாதாரச் செயன்முறை ஒன்றினை வரிசை ஒழுங்கில்காட்டும விடையைத் தெரிவுசெய்க.

1 உற்பத்தி, நுகர்வு, விநியோகம் 2 உற்பத்தி, விநியோகம், நுகர்வு

3 உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், விநியோகம் 4 உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், நுகர்வு

14 நபரினுள், நபர்களுக்கிடையே, குடும்பத்தினுள், குடும்பங்களுக்கிடையே ஏற்படும் மோதல்கள் அறியப்படுவது

1 சர்வ மோதல்கள் எனவாகும் 2 குடும்ப மோதல் எனவாகும்

3 சிக்கலான மோதல் எனவாகும் 4 நபர்களுக்கிடையிலான மோதல் எனவாகும்.

15 மோதல்களைத் தவிர்ப்பதற்காக ஒரு பிரசையினால் வளர்த்துக்கொள்ள வேண்டிய நபர் சார்ந்த குணவியுல்புகளை உள்ளடங்கும் விடையைத் தெரிவுசெய்க.

1 மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், ஏனையோரின் கருத்துக்களை மதித்தல், நியாயத்தன்மை

2 தாங்கும் சக்தி, ஈகை, சமனான அனுபவம்

3 பயனுறுதியுள்ள தொடர்பாடல், ஆக்கபூர்வ சிற்தனை, செவிமடுத்தல்

4 ஆதம விளக்கம், பொறுமை, சகிப்புத் தன்மை

16 சட்டத்தின் பிரதான குறிக்கோள்

1 மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நிர்வாகத்தை முன்னெடுக்க வழிகாட்டுதல்.

2 மக்களினது உயிர், சொத்துக்கள் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மனித நடத்தைகளைக் கட்டுப்படுத்தல்

3 மக்கள் மத்தியில் சட்டம் தொடர்பான அறிவை உறுதி செய்தல்.

4 சமூகத்தில் தவறிழைப்பவர்கள் அனைவரையும் நீதிமன்றத்தின் முன் நிறுத்துதல்

17 இலங்கையில் இறுதியானதும் மிக உயர்ந்த நீதிமன்றமாகவும் செயற்படுவது

1 உயர் நீதிமன்றம் 2 மேன்மறையீட்டு நீதிமன்றம்3 மேல்நீதிமன்றம் 4 யுத்த நீதிமன்றம்

18 கொலைகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் உள்ள நீதிமன்றமாவது

1 மேன்முறையீட்டு நீதிமன்றம் 2 மாகாண உயர் நீதிமன்றம்

3 மாவட்ட நீதிமன்றம் 4 உயர் நீதிமன்றம்

19 மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு அத்தண்டனையை நிறைவேற்றுமாறு தெவையான சிபாரிசுகளை சனாதிபதிக்கு வழங்குவது

1 சட்டமா அதிபரினாலாகும் 2 பிரதம நீதியரசரினாலாகும்

3 சொலிசிஸ்டர் ஜெனரலினாலாகும் 4 நீதி அமைச்சரினாலாகும்

20 1931ஆம் ஆண்டில் நடைபெற்ற டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனம் பின்வருவனவற்றில் எது?

1 அரசியலமைப்புச் சபை 2 அரசசபை

3 தேசிய அரசசபை 4 பாராளமன்றம்

21 1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் மூலம் ஏற்படுத்தப்பட்ட பிரதான அரசியலமைப்பு மாற்றம்

1 விகிதாசார பிரதிநித்துவ முறைமை அறிமுகம் செய்யப்பட்டமையாகும்.

2 சர்வசன வாக்கெடுப்பு முறைமை அறிமுகஞ் செய்யப்பட்டமையாகும்

3 நிறைவேற்று அதிகாரமள்ள சனாதிபதி பதவியை ஏற்படுத்தியமையாகும்.

4 மாகாணசபை முறையை அறிமுகஞ் செய்தமையாகும்.

22 19ஆவது அரசியல் சீர்திருத்தத்தின்படி சனாதிபதியினால் பாராளமன்றத்தைக் கலைக்க முடிவது

1 பாராளுமன்றத்தின் பதவிக்காலம் குறைந்தபட்சம் ஒரு வருடம் முடிவடைந்த பின்னராகும்.

2 பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் என பிரதமர் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில்

3 சனாதிபதியின் விருப்பின்படி எந்த ஒரு சந்தர்ப்பத்திலாகும்.

4 பாராளுமன்றம் உருவாகி 4 ½ ஆண்டுகள் பதவிக்காலம் முடிவடைந்த பின்னராகும்.

23 இலங்கையின் உள்ளூராட்சி நிறுவகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளில் பொதுப்பயன்பாட்டுச் சேவைகளில் அடங்காத பணியொன்றாவது

1 பொது இடங்களுக்கு மின்சாரம் வழங்கலாகும்

2 மக்கள் சந்தைகளை நிர்வகித்தல்

3 பொது மலசலகூடங்களை நிறுவுதலும் பராமரித்தலும்

4 பொத வாசிப்பு நிலையங்களை நிர்வகித்தல்

24 மனிதனின் தலையீட்டினால் கட்டியெழுப்பப்பட்டுள்ள சமயங்கள், உரிமைகள், மரபுரிமைகள் பழக்கவழக்கங்கள், கடமைகள், சட்டரீதியான சம்பிரதாயங்கள் போன்ற அம்சங்கள் உள்ளடங்கும் சுற்றாடல் பின்வரும் என்பெயர் கொண்டு அழைக்கப்படும்

1 சமூகச் சுற்றாடல் 2 இயற்கைச் சுற்றாடல்

3 உயிரினச்சுற்றாடல் 4 மனிதச் சுற்றாடல்

25 A – கணினி அறிவு, B – மெய்நிகர் மொத்த தேசிய உற்பத்தி

C – பசுமை மொத்த உள்நாட்டு உற்பத்தி, D – பொருளாதார வளர்ச்சி வீதம்

E – பௌதிக வாழ்க்கைத்தரச்சுட்டி

அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகுதி விதிகளில் மரபு ரீதியான (பாரம்பரிய) தகுதி விதிகளை மட்டும் உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.

1 Aயும் Bயும் 2 Bயும் Cயும் 3 Bயும் Dயும் 4 Dயும் Eயும்

26 சுற்றாடலுடன் தொடர்பான பிரசைகளின் பொறுப்பாக அமைவது

1 அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது சூழல் கிரயத்தைக் கணிப்பிடல்

2 அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் சூழல் நேயமான பிரசைகளை உருவாக்குதல்

3 எப்போதும் சூழல்நேயமான வாழ்க்கை முறையொன்றைப் பின்பற்றுதல்.

4 சுற்றாடலுடன் தொடர்புடைய நீதி சட்டத்திற்கு ஏற்புடையதாக செயற்பட பிரசைகளின் மனப்பாங்குகளை அபிவிருத்திசெய்தல்

27 அபிவிருத்தி அடைந்த நாடுகளின் இரண்டு இயல்புகளை உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.

1 நகரக் குடித்தொகை குறைவாக இருப்பதுடன் சிசுமரண வீதமும் குறைவாகும்.

2 ஆயுட்கால எதிர்பார்ப்பு உயர் மட்டத்தில் உள்ளதுடன் குடித்தொகையின் வளர்ச்சி வீதமும் அதிகமாகும்.

3 பௌதிக வாழ்க்கை தரச்சுட்டி உயர்வாகவும் வெளிநாட்டுச் செலாவணி வருமானங்கள் குறைவாகவும் காணப்படும்.

4 மனித அபிவிருத்திச்சுட்டி உயர்வாக இருந்த போதிலும் குடித்தொகை வளர்ச்சி வீதம் குறைவானது

28 இலங்கையில் மனித உரிமைகளின் அமுலாக்கம் தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களில் தவறான கூற்றைத் தெரிவுசெய்க.

1 ஏதேனும் நிறைவேற்று அல்லது நிர்வாக செயலின் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்படுமாயின் உயர் நீதிமன்றத்திற்கு முறைப்பாடு செய்து நியாயமான தீர்வைப் பெற சகல மக்களுக்கும் முடியம்.

2 அடிப்படை உரிமை மீறல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்துப் பொருத்தமான சிபாரிசுகளைச் செய்யும் அதிகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு உள்ளது

3 எந்த ஒரு பிரசைக்கும் மனித உரிமைகள் மீறல் தொடர்பான செயற்பாட்டின் போது வழங்கப்பட்ட தீர்ப்பு திருப்தியை ஏற்படுத்தாதிருக்குமாயின் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாட்டைச் செய்ய முடியும்.

4 அரசாங்க அல்லது உள்ளூராட்சி நிறுவகத்தின் உத்தியோகத்தர் ஒருவரினால் மனித உரிமை மீறல் பற்றிய முறைப்பாட்டை விசாரித்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் நிருவாக செயற்பாடுகள் பாராளுமன்ற ஆணையாளருக்கு உள்ளது.

29 நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி தொடர்பாக பிரசைகளின் கடமையாகக் கருதப்படக்கூடியது பின்வருவனவற்றுள் எதுவாகும்.

1 மிகை நுகர்வைக் தவிர்த்தல்

2 சூழல் நேயமான பொருட்கள் மற்றும் சேவை வழங்குனர்களை ஊக்குவித்தல்

3 சுற்றாடல் தொடர்பான நியமங்களை அறிமுகம் செய்தல்.

4 சுற்றாடல் மீதான தாக்கங்களை மதிப்பிடல்

30 ஒரு நாட்டின் வெளிநாட்டு தேறிய காரணி வருமானத்தைக் காவனத்திற் கொண்ட பின்னர் வருடமொன்றில் உற்பத்தி செய்யப்படுகின்ற சகல பண்டங்கள் மற்றும் சேவைகளின் மொத்தப் பெறுமானம் என்ன பெயரால் அழைக்கப்படும்

1 மெய்நிகர் மொத்த தேசிய உற்பத்தி
2 நிதிசார் மொத்த தேசிய உற்பத்தி

3 மொத்த தேசிய உற்பத்தி
4 பசுமை உள்நாட்டு உற்பத்தி

31 இயற்கைச் சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற இயற்கையான காரணங்கள் இரண்டினை உள்ளடக்கியுள்ள விடையைத் தெரிவு செய்க.

1 பாலைவனமாதல், உவர்த்தன்மை

2 பனியாறுகள் உருகுதல், சமுத்திர நீர் மட்டம் உயர்வடைதல்

3 சூறாவளிகள், சுனாமி

4 பு‘கோளம் வெப்பமடைதல், அமில மழையின் வீழ்ச்சி

32 சுற்றாடல் அழிவடைவதற்கான பிரதான காரணமாகக் கருதப்படவது மக்களினது

1 வறுமை நிலையாகும் 2 கல்வி இன்மை

3 அறியாமையாகும் 4 தவறான மனப்பாங்காகும்

33 சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் உள்ளடங்கும் பிரதான சட்ட ஆவணங்களின் எண்ணிக்கை

1 6 2 5 3 4 4 3

34 யுத்த நோக்கங்களுடன் உரவாக்கப்பட்ட பிராந்திய ஸ்தாபனத்திற்கான ஒரு உதாரணம்

1 ஆசியான் 2 நேட்டோ 3 சார்க் 4 பிம்ஸ்ரெக்

35 குறித்தவொரு நாடொன்று இராஜதந்திர தொடர்புகளைக் கட்டியெழுப்புவதில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய மிக முக்கிய காரணியாவது அந்நாட்டின்

1 புவியியல் நிலைமை 2 அரசியல் ஸ்திரத்தன்மை

3 வெளிநாட்டுக்கொள்கை 4 பொரளாதாரக் கொள்கை

36 சர்வதேச தொடர்புகளின் தற்கால நிலையை நோக்கும் போது காணக்கூடிய பிரதான பண்பு

1 சர்வதேச பங்கரவாதத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகும்.

2 பல்தேசியக் கம்பனிகள் பலவீனமான நாடுகளின் வளங்களை சூறையாடுவதாகும்.

3 பலமிக்க அரசுகள் தமது அதிகாரத்தை வலுப்படுத்த முயற்சித்தலாகும்

4 பலமிக்க அரசுகள் பலவீனமான நாடுகளின் மீது பல்வேறு வகையான செல்வாக்குகளைச் செலுத்துதலாகும்.

37 பின்வரும் எந்த அமைப்பின் அங்கத்தவர் நாடுகளுக்கிடையில் சப்தா, மற்றும் சப்ீதா வர்த்தக ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டன

1 ஆசியான் 2 பிம்ஸ்ரெக் 3 ஐரோப்பிய ஒன்றியம் 4 சார்க்

38 அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போன்று அபிவிருத்தியடையும் நாடுகளும் பொதுவாக முகங்கொடுக்கும் பிரச்சினையொன்று

1 சாதகமற்ற சென்மதி நிலுவை 2 அரசியல் ஸ்திரத்தன்மையற்று இருத்தல்

3 சர்வதேச பயங்கரவாதிகளின் தாக்கம்

4 உள்ளூர் செல்வங்களின் உரித்தரிமை வெளிநாட்டவரிடம் காணப்படல்

39 நாடுகளுக்கிடையில் சமாதான இராஜதந்திரத் தொடர்புகளைப் பேணும் பிரதான ஊடகமாவது

1 தூதுவர் சேவை    2 பாதுகாப்பு அமைச்சு

3 சனாதிபதி அலுவலகம்    4 வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

40 மேலேயுள்ள நிரல் I ஆனது ஐக்கிய நாடுகளின் முக்கிய நிறுவனங்கள் மூன்றினையும் நிரல் II ஆனது அவற்றிற்குரிய அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் சிலவற்றையும் காட்டுகிறது.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1 பொதுச்சபை | A ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப் படையைக் கட்டுப்படுத்தல் |
| 2 பாதுகாப்புச்சபை | B ஆயுதங்களை கட்டுப்படுத்துவதற்கான திட்டங்களை அமுலாக்குதல். |
| 3 ஐக்கிய நாடுகள் செயலகம் | C ஆயுதத் தவிர்ப்பு, ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பான கொள்கைகளைப் பரிசீலித்தலும் சிபாரிசுகளைச் செய்தலும் |
| | D மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் |

1 ABC    2 BAD    3 CBA    4 DCB

**2017**

41 பாராளமன்ற அரசாங்க முறையின் பிரதான பகுதிகள் மூன்று வரிசையொழுக்கில்

1 நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை, நீதித்துறை

2 சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை

3 நீதித்துறை, நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை

4 நிறைவேற்றுத்துறை, நீதித்துறை, சட்டத்துறை

42 இலங்கை அரசியலமைப்பிற்கிணங்க தேர்தல் தொகுதிகள் பிரித்தொதுக்கப்படுவது

1 எல்லை நிர்ணய ஆணைக்குழுவினலாகும்    2 தேர்தல்கள் ஆணைக்குழுவினாலாகும்

3 அரசசேவை ஆணைக்குழுவினாலாகும்    4 பாராளுமன்றத் தெரிவுக்குழுவினாலாகும்

43 எந்தவொரு வேறுபாடுமின்றி உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு இடமளித்தல் பின்வரும் எப்பெயரால் அழைக்கப்படும்

1 சமத்துவம்    2 நீதி    3 சட்டம்    4 ஒழுக்கம்

44 கல்கட்சி முறையைக் கொண்ட நாடுகள் இரண்டைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

1 பெரிய பிரித்தானியா, மலேசியா    2 இலங்கை, இந்தியா

3 ஜேர்மனி, பிரான்சு    4 ஐக்கிய அமெரிக்க குடியரசு, கனடா

45 பாராளுமன்ற அரசாங்க முறையில் நிறைவேற்றுத்துறையாக விளங்குவது

1 ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சரவை

2 சபாநாயகர் உள்ளிட்ட ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள்

3 பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை

4 ஜனாதிபதியும் பிரதமரும்

46 அரசின் விருப்பையம் மக்களின் எதிர்பார்ப்பையும் நடைமறைப்படுத்தும் பிரதிநிதியாகக் கருதப்படுபவர் / கருதப்படுவது

1 ஜனாதிபதி 2 பிரதமர் 3 சபாநாயகர் 4 அரசாங்கம்

47 ஐரோப்பாவில் ஆரம்பத்தில் தோன்றிய அரசுகள் இரண்டைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க

1 இங்கிலாந்து, ஜேர்மனி 2 ஸ்பெயின், இத்தாலி

3 ஒல்லாந்து போர்த்துக்கல் 4 இங்கிலாந்து, பிரான்ஸ்

48 ஐக்கிய அமெரிக்க குடியரசில் சமஷ்டியாட்சி அரசியலமைப்பிற்கிணங்க மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் இரண்டுமாவன

1 கல்வியும், சுகாதாரமும் 2 வரிவிதிப்பும் வெளிநாட்டு வர்த்தகமும்

3 வீடமைப்பும் நிர்மாணமும் 4 உள்ளூராட்சியும் பெரந்தெருக்களம்

49 ஊழியச் செறிவான தொழினுட்பப் பயன்பாடு என்பதனாற் கருதப்படுவது

1 பொருள் உற்பத்தியில் இயந்திர உழைப்பை அதிகளவில் பயன்படுத்தல்

2 பொருட்களை விநியோகிக்கும் போது மனித உழைப்பை அதிகளவில் பயன்படுத்தல்

3 பொருள் உற்பத்தியில் மனித உழைப்பை அதிகளவில் பயன்படுத்தல்

4 பொருட்களை விளம்பரப்படுத்துவதற்குப் பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்தல்

50 நுகர்வுப் பொருள், இடைநிலைப்பொருள் ஆகியவற்றை வரிசையொழுங்கில் தரும் விடையைத்தெரிவு செய்க.

1 உணவும் மருந்தும் 2 இயந்திரங்களும் தளபாடங்களும்

3 ஆடையணிகளும் பசளையும் 4 கட்டடங்களும் சிமெந்தும்

51 நிலம், உழைப்பு மூலதனம் மற்றும் முயற்சியாண்மை போன்ற உற்பத்திக் காரணிகளுக்கான கட்டணம் வரிசையொழுங்கில்

1 சம்பளம், வட்டி, வாடகை, இலாபம் 2 இலாபம், வாடகை, வட்டி, சம்பளம்

3 வாடகை, சம்பளம், வட்டி, இலாபம் 4 இலாபம், வாடகை, சம்பளம், வட்டி

52 நட்டமடையும் அரச முயற்சியாண்மைகளைத் தனியார் மயமாக்குதலை அடிப்படை அம்சமாகக் கொண்டது

1 முதலாளித்துவ பொருளாதார முறை 2 சமவுடமைப் பொருளாதார முறை

3 கலப்புப் பொருளாதார முறை 4 நிலைமாறும் பொருளாதார முறை

53 பல் பண்பாட்டுச் சமூகமொன்றில் சிறந்த செயற்பாட்டிற்குப் பாதகமாக அமையும் பண்பு

1 ஊனையோரின் பண்பாட்டை மதித்தல்.

2 அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் ஏனையோரின் பண்பாட்டை விட தமது பண்பாடு உயர்ந்தது எனக் கருதிச் செயற்படல்

3 இன, மத பேதமின்றிச் செயற்படல்

4 ஏனைய இனத்தவரின் மொழி பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளல்

54 மாகாணசபை முறையின் கீழ் மத்திய அரசிற்கும் மாகாணசபைகளுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்தும் பிரதிநிதியாக விளங்குபவர்

1 மாகாண ஆளுநர் 2 முதலமைச்சர்

3 மாகாணப் பிரதம செயலாளர் 4 மாகாணசபைத் தலைவர்

55 தனியார் சொத்துடமை மற்றும் இலாப நோக்கை அடிப்படையாகக் கொண்டு தொழிற்படும் பொருளாதார முறை

1 சந்தைப் பொருளாதாரம் 2 கலப்புப் பொருளாதாரம்

3 சமவுடமைப் பொருளாதாரம் 4 முதலாளித்துவ பொருளாதாரம்

56 உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய பொதுப்பயன்பாட்டுச் சேவைகளின் கீழ் ஆற்றப்படும் பணி

1 பொதுமலசலகூட நிர்மாணிப்பும் புனரமைப்பும்

2 பொதுப்பாதைகளை நிர்மாணித்தலும் பேணுதலும்

3 பொதுச்சந்தைகளை நடாத்துதல்

4 கழிவுநீர் வடிகால்களை முறையாகப் பராமரித்தல்

57 கருத்துச் சுதந்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும் உரித்தாகும் மனித உரிமைத் தொகுதியானது

1 பொருளாதார மற்றும் குடியியல் உரிமைகள் 2 மனித மற்றும் பண்பாட்டு உரிமைகள்

3 அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகள் 4 குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள்

58 சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் அடிப்படையாக அமைவது பின்வருவனவற்றுள் எது

1 பிள்ளையின் சுதந்திரத்தைப்பாதுகாத்தல்

2 பிள்ளைக்கு அதிகபட்ச நன்மையை வழங்குதல்

3 பிள்ளையின் கல்வியை உறுதிப்படுத்தல்

4 பிள்ளையின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

59 கடமைகள் இரண்டு வகைப்படும் அதிலொன்று தார்மீகக் கடமையாகும் மற்றையது

1 சமயக்கடமை 2 சமூகக்கடமை

3 சட்டரீதியான கடமை 4 பிரசைக்குரிய கடமை

60 இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது

1 1931ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலமாகும்

2 1947ம் ஆண்டு அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலமாகும்

3 1972ம் ஆண்டு அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலமாகும்

2 1978ம் ஆண்டு அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலமாகும்

61 மேன்மறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்களை மாகாண மட்டத்தில் பரவலாக்கும் நோக்கில் நிறுவப்பட்ட நீதிமன்றானது

1 மஜிஸ்ரேட் நீதிமன்றம் 2 மாவட்ட நீதிமன்றம்

3 மேல் நீதிமன்றம் 4 மாகாண மேல் நீதிமன்றம்

62 ஒரு நாடு சட்டத்தின் மேன்மைக்கு உட்பட்டு ஆட்சி செய்யப்படுகின்றன

1 சட்டத்தின் ஆட்சி என்பர் 2 நீதித்துறைச் சுதந்திரம் என்பர்

3 தன்னாட்சி என்பர் 4 ஜனநாயகம் என்பர்

63 இலங்கையின் வருடாந்த வரவத்செலவுத் திட்டம் கட்டுப்படுத்தப்படுவது

1 நிதியமைச்சரினால் 2 சட்டத்துறையினரால்

3 இலங்கை மத்திய வங்கியால் 4 ஜனாதிபதியால்

64 குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தத்துடன் இணைந்த முதலாவது விருப்பத்துக்குரிய பின்னேட்டுக்கமைய

1 குற்றவாளிக்கு மரணதண்டனைக்குப் பதிலாக வேறு மாற்றுவழித் தண்டனைகளைக் கோர முடியம்.

2 கடந்தகால நிகழ்ச்சிகளுக்குப் பொருந்தக்கூடிய வகையில் விதிக்கப்படும் தண்டனையிலிருந்து விடுபம முடியம்.

3 பிள்ளையைக்கடத்திச் செல்லல் மற்றும் சிறைபிடித்தல் போன்றவற்றுக்கான தண்டனையை விதிக்க முடியம்.

4 நீதியை நிலைநாட்டுவதில் தமது நாடு தொடர்பில் திருப்தியடைய முடியவில்லெயெனில் ஒரு பிரசை உரிமை மீறப்பட்டுள்ளதாக மனித உரிமைக் குழுவிடம் முறையிட முடியம்.

65 மோதல் ஒன்றைத் தீர்க்கும் போது வெற்றி – வெற்றி தீர்வை பெறுவதற்குப் பயன்படுத்தக்கூடிய இலகுவான முறை

1 கலந்துரையாடல் முறை 2 வேண்டுகோள் விடுத்தல்

3 ஆலோசனைகளை முன்வைத்தல் 4 மத்தியஸ்தம் வகித்தல்

66 பிரசையொருவரால் நிறைவேற்றப்பட வேண்டிய சட்டக் கடமைகள் இரண்டாவன

1 அரசியலமைப்பைப் பாதுகாத்தலும் சூழலைப் பேணுதலும்

2 தீவிரவாதத்தை நிராகரிக்கச் செயற்படலும் தேசிய மரபுரிமைகளையும் சொத்துக்களையும் பாதுகாத்தலும்

3 அரசினால் விதிக்கப்படும் வரிகளைச் செலுத்துதலும் பொதுச்சொத்துக்களைப் பாதுகாத்தலும்

4 சமயக் குருமார்களை மதித்தலும் முதியோரைப் பேணுதலும்

67 உலக மயமாக்கலினால் இலங்கை எதிர்நோக்கியுள்ள தீய விளைவு

1 வினைத்திறனற்ற கைத்தொழில்கள் சந்தையிலிருந்து நீங்குதல்.

2 மூளைசாலிகளின் துரிதமான வெளியேற்றம்

3 பல்வேறு வலய ஒழுங்கமைப்புக்களில் இணைந்துகொள்ள முடிந்தமை.

4 வெளிநாட்டு முதலீடுகளும் தொழினுட்பமும் உள்வருதல்

68 தொழிற்றுறையில் தொழில்வழங்குநருக்கும் தொழில்புரிவோருக்குமிடையே பிணக்குகள் ஏற்படும்போது ஜனநாயக ரீதியான முறையில் அவற்றுக்குத் தீர்வுகாண பெரும்பாலும் பயன்படுத்தப்படும் முறையானது

1 கலந்துரையாடல் முறை

2 இணக்கப்படுத்தல்

3 மத்தியஸ்தம் வகித்தல்

4 வேண்டுகோள் விடுத்தல்

69 மாகாண நீதிமன்றத்திற்குரிய அதிகாரங்கள் இரண்டைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

A – வர்த்தகப் பிணக்குகளைத் தீர்த்தல்

B – அரசுக்கெதிரான சூழ்ச்சி பற்றிய வழக்குகளைத் தீர்த்தல்

C – தொழில் நியாயமன்றத் தீர்மானங்களை பற்றிய வழக்குகளைத் தீர்த்தல்

D – பாராளுமன்றத் தேர்தல் ஆட்சேபனை விண்ணப்பங்களை விசாரித்தல்

E – பெண்கள் மீதான வன்புணர்வு பற்றிய வழக்குகளை விசாரித்தல்

1 AB 2 AC 3 BE 4 CD

70 நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவராகப் பதவி வகிப்பவர்

1 பிரதம நீதியரசர்

2 சொலிசிட்டர் ஜெனரல்

3 சட்டமா அதிபர்

4 நீதியமைச்சரின் வெளலாளர்

71 பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்களில் எந்தச் சீர்திருத்தத்தின் மூலம் இலங்கையருக்கு முதற் தடவையாக அரசியலில் அதிகளவில் பங்குபற்றும் வாய்ப்பு கிடைத்தது

1 1833 கோல்புறுக் கமரன் சீர்திருத்தம்

2 1910 குளு மக்கலம் நீர்திருத்தம்

3 1921 மெனிங்

4 1931 டொனமூர்

72 பின்வரும் கூற்றுக்களில் கவனம் செலுத்துக.

- இலங்கையின் அரசியலமைப்பில் முதற் தடவையாக அடிப்படை உரிமைகள் பற்றியதோர் அத்தியாயம் செர்க்கப்படல்
- இலங்கையின் இறுதியானதும் உயர்ந்ததுமான நீதிமன்றமாக உயர் நீதிமன்றத்தை ஏற்றுக்கொள்ளல்
- அரசியலமைப்பு நீதிமன்றமொன்றை நிறுவுதல்

மேற்படி மாற்றங்கள் பின்வரும் எந்த அரசியலமைப்பின் கீழ் ஏற்படுத்தப்பட்டன

1 1931ஆம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்பு

2 1947ம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பு

3 1972ம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பு

2 1978ம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு

73 ஒருவர் கைத்தடியை அசைத்துக்கொண்டு வீதியில் செல்ல முடியுமாயினும் அச்சுதந்திரம் அடுத்தவரின் மூக்கு நுனியில் முடிவடைகிறது - ஹரால்ட்ட லஸ்கி

மனித உரிமைகள் பற்றிய மேற்படி கூற்றிலிருந்து விளங்கிக்கொள்ளக்கூடியது யாதெனில்

1 மனித உரிமைகளை அனுபவிக்கும் போது வலது குறைந்தோருக்கு ஏனையோர் உதவுதல் வேண்டும்.

2 பிறிதொருவரின் உரிமைகள் மீறப்படும் வகையில் உரிமைகளை அனுபவிப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை

3 தனது கைத்தடியை அசைத்துக்கொண்டு வீதியில் செல்லும் உரிமை எந்தவொரு நபருக்கும் உண்டு

4 மனித உரிமைகளை அனுபவிப்பதில் நபரொருவருக்குக் கட்டுப்பாடுகளை விதிக்க முடியாது

74 மனித அபிவிருத்திச்சுட்டிக்குரிய நியதிகளாவன

1 ஆயுள் எதிர்பார்க்கை, எழுத்தறிவு மற்றும் கொள்வனவு ஆற்றலின் அடிப்படையில் கணிக்கப்பட்ட தனிநபர் மொத்த தேசிய உற்பத்தி

2 ஆயுள் எதிர்பார்க்கை, தாய் மரண வீதம் மற்றும் எழுத்தறிவு

3 சிசுமரண வீதம், எழுத்தறிவு மற்றும் ஆயுள் எதிர்பார்க்கை

4 ஆயுள் எதிர்பார்க்கை, இறப்பு வீதம் மற்றும் கொள்வனவு ஆற்றலின் அடிப்படையில் கணிக்கப்பட்ட தனிநபர் மொத்த தேசிய உற்பத்தி

75 வங்காள விரிகடாக் கடற்கரைக்குட்பட்ட நாடுகளை இணைந்து கைத்தொழில் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்காக தாபித்துள்ள பிம்ஸ்டெக் அமைப்பிற்குரிய நாடுகள் இரண்டாவன

1 இலங்கை, சிங்கப்பூர்　　2 பங்களாதேஷ், இந்தோனேசியா

3 இந்தியா, மாலைதீவு　　4 மியன்மார், தாய்லாந்து

76 அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளில் அவதானிக்கக்குடிய அம்சங்களில் சில அபிவிருத்தியடைந்துவரும் இலங்கையிலும் காணப்படகின்றன. இலங்கையில் அவதானிக்கக்கூடிய அவ்வாறான பண்புகள் இரண்டைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

1 உயர்ந்த மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணும் குறைந்த குடித்தொகை விருத்தியும்

2 அதிக நகர குடித்தொகையும் குறைந்த சிசுமரண வீதமும்

3 உயர்ந்த ஆயுள் எதிர்பார்க்கையும் உயர்ந்த எழுத்தறிவும்

4 உயர்ந்த கல்விச் செலவும் குறைந்த தாய் மரண வீதமும்

77 தென் மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் சமூகப் பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு 1950ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒன்றிணைந்த திட்டமானது பின்வரும் என்பெயரால் அழைக்கப்படும்

1 ஆசியான் அபிவிருத்தி 2 கொழும்பத்திட்டம் 3 பொதுநலவாயம் 4 சார்க் அமையம்

78 கிராமிய மக்களின் போசனை மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் விவசாயத்தறையில் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் பாடுபடல் போன்ற நோக்கங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் இணை நிறுவனமானது

1 உணவு விவசாயத் தாபனம் 2 உலக உணவுத் திட்டம்

3 உலக சுகாதார தாபனம் 4 உலக வங்கி

79 பேண்தகு(நிலையான) அபிவிருத்தியை அடையும் பொருட்டு நிறைவேற்ற வேண்டிய சமூகத்தேவைகள் இரண்டைக் கொண்டுள்ளவிடையைத் தெரிவுசெய்க.

A – அதிகபட்ச இலாபநோக்கைக் கொண்ட உற்பத்தி மனப்பாங்கைக் கட்டுப்படுத்தல்

B – சந்தை வரிவடைவதால் ஏற்படும் போட்டியைக் கட்டுப்படுத்தல்

C – மனிதனின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல்

D – நீதியை நிலைநாட்டுதல்

1 AB 2 BC 3 CE 4 DE

80 ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நிர்வாகப் பிரிவு

1 பொதுச்சபை 2 சர்வதேச நீதிமன்றம் 3 நம்பிக்கைப் பொறுப்புசபை 4 செயலகம்

## 2018

81 மனிதனின் நிலைப்பிற்கு அத்தியாவசியமான அடிப்படை அம்சங்கள் எப்பெயரால் அழைக்கப்படும்

1 விருப்பு 2 பொருட்களும் சேவைகளும் 3 தேவைகள் 4 உற்பத்தி

82 இலங்கையின் பிராதன சட்ட அலுவலர்

1 பிரதம நீதியரசர் 2 நீதியமைச்சராவார் 3 சட்டமா அதிபராவார் 4 ஓம்புபூட்ஸ்மன்

83 ஒற்றையாட்சி அரசுகளை மட்டும் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.

1 பெரிய பிரித்தானியா, ஜப்பான், பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா

2 ஜப்பான், நேபாளம், பிரான்ஸ், இலங்கை

3 இந்தியா, இலங்கை, பெரிய பிரித்தானியா, பிரான்ஸ்

4 ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், பிரான்ஸ்

84 அபிவிருத்தியை அளவிடுவதற்காகப் பயன்ப:த்தப்படும் நவீன அளவைகளில் ஒன்றாக அமைவது

1 தலாதேசிய உற்பத்தி
2 தனி நபருக்கான தலா தேசிய உற்பத்தி

3 மனித அபிவிருத்திச் சுட்டி
4 பொருளாதார வளர்ச்சி வேகம்

85 அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவுசெய்க

1 நோர்வே, ஜப்பான், பங்களாதேஷ், கனடா

2 இந்தியா, மோசமாலியா, எதியோப்பியா, சியாராலியோன்

3 பெல்ஜியம், மியன்மார், பிரான்ஸ், ஜேர்மன்

4 நேபாளம், அவுஸ்ரெலியா, சுவீடன், ஐக்கிய அமெரிக்கா

86 நேரடி ஜனநாயக ஆட்சி முறையை நடைமுறைப்படுத்தும் போது தோன்றும் பிரச்சினை

1 அரசில் பல்வேறு கட்சிகள் காணப்படல்

2 அரசு அதிகளவு சனத்தொகையைக் கொண்டிருத்தல்

3 உரிய காலத்தில் தேர்தல் நடாத்தப்படல்

4 பிரசைகளிடையே வருமான வேறுபாட காணப்படல்

87 ஒரு கட்சி முறையைக் கொண்ட நாடு

1 பெரிய பிரித்தானியா
2 ஐக்கிய அமெரிக்கா
3 சீனா
4 அவுஸ்ரேலியா

88 சனநாயக அரசொன்றில் மக்களுக்குரிய அதிகாரம் அறியப்படுவது

1 இறைமையதிகாரம் என
2 சட்டபூர்வ அதிகாரம் என

3 சர்வசன வாக்குரிமை என
4 சட்டத்தின் ஆட்சியதிகாரம் என

89 சார்க் அமைப்பினை ஏனைய சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புக்களுடன் ஒப்பிடும் போது சார்க் அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான நெருக்கமான உறவு பலவீனமான நிலையில் காணப்படுவதற்கான காரணமாக அமைவது

1 பல்வேறுபட்ட சமய, கலாசாரப் பண்புகளைக் கொண்டுள்ளமை

2 இயற்கை அனர்த்தங்களுக்கு தொடர்ச்சியாக முகங்கொடுக்கின்றமை

3 குறைந்த எழுத்தறிவு மட்டத்தைக் கொண்டுள்ளமை

4 உள்நாட்டு அரசியல் பிரச்சினை மற்றும் யுத்த நிலைமைகளின் தாக்கத்திற்குட்பட்டுள்ளமை

90 உரிமைகள் மற்றும் அதனேடிணைந்த ஒழுக்கரீதியான கடமைகள் குறிப்பிடப்படும் விடையைத் தெரிவுசெய்க.

1 அரசினால் விதிக்கப்படும் வரியைச் செலுத்துதல்

2 சூழலைப் பாதுகாத்தல்

3 அரசியலமைப்பிற்கிணங்க செயற்படல்

4 பொதுச்சொத்தக்களைப் பாதகாத்தல்

91 இலங்கையில் மாகாண சபையொன்றின் முதலமைச்சர் நியமனம் செய்யப்படுவது

1 சனாதிபதியால் 2 ஆளுநரால் 3 பிரதம மந்திரியால் 4 சபாநாயகரால்

92 இலங்கையில் நிர்வாக நடவடிக்கைகளினால் பிரசை ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்படுமாயின் அது தொடர்பில் முறைப்பாடு செய்ய வேண்டியது

1 ஓம்புட்ஸ்மனிடம் 2 சட்டமா அதிபரிடம் 3 ஜனாதிபதியிடம் 4 பிரதம நீதியரசரிடம்

93 நாடொன்றின் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட செயன்முறை விதிகள் அறியப்படுவது

1 ஒழுக்கநெறிகள் என 2 பழக்கவழக்கங்கள் என

3 கலாசாரம் என 4 சமூகம் என

94 பல்கலாசார சமூகமொன்றின் பிரசையொருவர் கொண்டிரக்க வேண்டிய குணவியல்பு

1 ஏனையோரின் கலாசாரத்திற்கு மதிப்பளித்தல்

2 பெரம்பான்மை இனத்தவரின் கலாசாரத்திற்கு மதிப்பளித்தல்

3 பிற சமயங்களைத் தழுவுதல்

4 கலப்புத் திருமணம் செய்தல்

95 காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவு அல்லாத நிகழ்வு

1 சமுத்திரத்தின் நீர்மட்டம் உயர்வடைதல் 2 எல்னினோ பாதிப்பு ஏற்படல்

3 சுனாமி ஏற்படல் 4 சூழல் வெப்பநிலை உயர்வடைதல்

96 தேசிய அரசொன்றின் முக்கிய பண்பு

1 பாராளுமன்றம் 2 நிறைவேற்றுத்துறை 3 அரசாங்கம் 4 நீதிமன்றம்

97 அதிகாரப் பரவலாக்கத்தின் போது அவதானிக்கக்கூடிய சிறப்பியல்பாவது

1 வேற்றுமையில் ஒற்றுமை கட்டியெழுப்பப்படல்

2 எழுதப்பட்ட அரசியலமைப்பு காணப்படல்

3 எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதிகாரத்தை மீளப்பெறக்கூடியதாகயிருத்தல்

4 அனைத்து தீர்மானங்களும் மத்திய அரசாங்கத்தினால் எடுக்கப்படல்

98 இலங்கையின் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு உரித்தல்லாத பணி

1 உள் வீதிகளை அமைத்தல்

2 பொதுமலசலகூட நிர்மாணிப்பும் பராமரிப்பும்

3 பிரதேசத்தில் சிறிய பாடசாலைகளை நிர்மாணித்தல்

4 பொதுவாசிப்பு நிலையங்களை நடாத்திச் செல்லல்

99 தனியாளொருவரின் உள்வாரி மற்றும் வெளிவாரியான காரணிகளின் நிமித்தம் உருவாகும் மோதல் எவ்வாறு அறியப்படுவது

1 கோத்திரங்களுக்கழடையே ஏற்படும் மோதல்

2 அரசியல் கருத்துக்களின் விளைவாகத் தோன்றும் மோதல்

3 தனியாளுக்குள் உருவாகும் மோதல்

4 சமூகக் காரணிகளால் உருவாகும் மோதல்

100 ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் மூலம் சிறுவர்களாகக் கணிக்கப்படும் வயதெல்லை எது

1 18 வயதுக்குக் குறைந்தோர் 2 16 வயதுக்குக் குறைந்தோர்

3 15 வயதுக்குக் குறைந்தோர் 4 14 வயதுக்குக் குறைந்தோர்

101 உலக மயமாக்கலின் விளைவாக இலங்கை முகம் கொடுத்துள்ள சாதகமான விளைவானது

1 பொரளாதாரப் பல்வகைமை ஏற்படல்

2 மூளைசாலிகளின் வெளியேற்றம் துரிதமாக இடம்பெறல்

3 உள்நாட்டு ஆரம்பக் கைத்தொழில்கள் அழிவுறல்

4 வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் உதவிகளைக் கொண்டு பிழைக்க வேண்டியிருத்தல்

102 நாடொன்றின் பிரசையொருவருக்குரிய அடிப்படை உரிமைகளை உள்ளக்கியுள்ள முக்கிய ஆவணம் எப்பெயரால் அழைக்கப்படும்.

1 மனித உரிமைகள் பிரகடனம் 2 அரசியலமைப்பு

3 தண்டனைச் சட்டக்கோவை 4 ஒருங்கியை பட்டியல்

103 அடிப்படை உரிமைகள் தொடர்பில் தவறான கூற்றைத் தெரிவுசெய்க.

1 அனைத்து மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளாகும்.

2 அனைத்து மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளன்று

3 அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது சட்ட உதவியைப் பெற முடியும்

4 அரசியல் யாப்பில் உள்வாங்கப்படாத உறுப்புரைகள் அடிப்படை உரிமைகளாகாது

104 நாடொன்றின் சமூகநீதி வீழ்ச்சியடைவதற்கு ஏதுவாயமைந்த காரணத்தைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

1 பொதுச்சேவை அரசியல் மயமாக்கலுக்குட்படாமை

2 பொருளாதார மற்றும் மனித வளங்கள் குன்றுதல்

3 பொதுச்சேவை வினைத்திறனுடன் செயற்படல்

4 லஞ்சமும் ஊழலம் அதிகரித்தல்

105 நிலைமாறும் பொருளாதாரங்களில் அவதானிக்கக்கூடிய பண்பாக அமைவது

1 தனியார்மற்றும் பொது முயற்சிகள் போன்ற இரண்டு பிரிவுகள் காணப்படல்

2 உற்பத்திக் காரணிகளின் உரிமையானது தனியார் துறைக்குரித்ததாதல்

3 மானியங்கள் மற்றும் விலைக்கட்டுப்பாடு முறையைத் தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்

4 நட்டத்தில் இயங்கும் பொதுமுயற்சிகளை தனியார் மயமாக்குதல்

106 அரசியலமைப்பில் சமயத்திற்கு முன்னுரிமை வழங்காத நாடு எது

1 இலங்கை 2 பாகிஸ்தான் 3 இந்தியா 4 பங்களாதேசம்

107 ஆலோசனைகளை முன்வைத்தல் மற்றும் பேரம்பேசுதல் பெரமளவில் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

1 தொழில் பிணக்குகள், தோட்டத் தொழிலாளர் பிணக்குகள்

2 தினப்பட்ட பிணக்குகள், ஊழியரது பிணக்குகள்

3 தனிப்பட்ட பிணக்குகள், பொதுப்பிணக்குகள்

4 சொத்துப் பிணக்குகள், குடும்பப் பிணக்குகள்

108 அரசின் பிரதான வகைகள் இரண்டும் எவை?

1 சனாதிபதி மற்றும் பாராளுமன்ற அரசாகக் காணப்படல்

2 சர்வாதிகார மற்றும் சனநாயக அரசாகக் காணப்படல்

3 ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டியாட்சி அரசாகக் காணப்படல்

4 தேசிய மற்றும் பிரதேச அரசாகக் காணப்படல்

109 சர்வதேச தொழிலாளர் தாபனம் பற்றியமிகச்சரியான கூற்றைத் தெரிவுசெய்க

1 சுயாதீனமான உருவாகிப் பின்னர் சர்வதேச சங்கத்தின் இணை நிறுவனமாகச் செயற்படல்

2 சுயாதீனமாக உரவாகிப் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் இணை நிறுவனமாகச் செயற்படல்

3 ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையினால் உருவாக்கப்பட்டு செயற்படல்

4 ஐக்கிய நாடுகள் சபையுடன் தொடர்பின்றி சுயாதீனமாகச் செயற்படல்

110 சமூகச் சூழல் என்பதனாற் கருதப்படுவது

1 மனிதனது தலையீடின்றி உருவான கூறுகளாகும்

2 மனிதனால் கட்டியெழுப்பப்பட்டதாகும்

3 பௌதீகக் கூறுகளால் கட்டியெழுப்பப்பட்டதாகும்

4 பௌதீகக் கூறுகளுக்கிடையிலான இடைத்தொடர்பினால் கட்டியெழுப்பப்பட்டதாகும்.

111 தமது நாட்டில் சட்டத்தை அமுல்படுத்தும் செயற்பாடு முடிவடைந்ததும் அதனால் திருப்தியுறாதவிடத்து முறைப்பாடு செய்யக்கூடிய மனித உரிமைகள் ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது

1 குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்பாட்டு ஒப்பந்தத்திற்கிணங்க

2 பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைக்கு இணங்க

3 குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்தத்துடன் இணைந்த முதலாவது விருப்பத்திற்குரிய பின்னேற்டிற்கு இணங்க

4 குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையுடன் சேர்க்கப்பட்ட இரண்டாவது விருப்பிலான பின்னேட்டிற்கு இணங்க

112 பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்களில் இலங்கையர்களுக்கு அதிக அரசியல் பங்குபற்றல் கிடைத்தது எந்த அரசியலமைப்புச் சீர்திருத்தத்திலாகும்.

1 கோல்புறுக் 2 குறுமக்கலம் 3 மனிங் 4 டொனமூர்

113 சனநாயக ஆட்சி முறையொன்று ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாக அமைவது

1 அரசாங்க சார்பற்ற நிறுவனங்களை வலுப்படுத்தல்

2 அரச ஊழியர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்குதல்

3 ஆளுங்கட்சியின் செயற்பாடுகளை விமர்சித்தல்

4 ஊடகச் சுதந்திரத்தைப் பேணுதல்

114 தேர்தலொன்றில் பொது மக்கள் விரும்பும் அரசாங்கமொன்றை அதிகாரத்தில் அமர்த்துவதில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாக அமைவது

1 சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெறல்

2 சட்டத்தின் ஆட்சி பாதுகாக்கப்படல்

3 மக்களுக்குப் போதியளவு அரசியலறிவு காணப்படல்

4 அனைவருக்கும் சமவுரிமை காணப்படல்

115 சர்வதேச அரசியலில் பலம்வாய்ந்த நாடுகள் பலம் குன்றியநாடுகள் மீது அழுத்தம் கொடுப்பதற்குப் பயன்படுத்துவது

1 கலாசார ஒத்துழைப்பு 2 கல்வி அபிவிருத்தி

3 சமயச் சம்பிரதாயங்கள் 4 வர்வதேச சங்கம்

116 நாடொன்றின் பிரசைகளுக்கு சனநாயக ஆட்சிமுறையில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு கிடைக்காமை பின்வரும் எந்தச்சந்தர்ப்பத்திலாகும்

1 வாக்களிப்பதன் மூலம் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்.

2 வேட்பாளராக முன்னிற்றல்

3 கல்வி, சுகாதாரம் போன்றவற்றை இலவசமாக வழங்குதல்

4 அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சித்தல்

117 ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளினை மட்டும் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

1 ஜப்பான், சீனா, இந்தியா, பிரான்ஸ்

2 சீனா, பிரித்தானியா, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா

3 ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா, அவுஸ்ரேலியா

4 பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன்

118 மோதலைக் குறைத்துக் கொள்வதற்காகப் பிரசையொருவரில் விருத்தி செய்ய வேண்டிய சமூகப் பண்பாவது

1 உயிர்ச்சேதத்தைத் தவிர்த்தல் 2 மன அழுத்தத்தைக் குறைத்தல்

3 ஏனையோரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்

4 ஆக்கபூர்வமாக சிந்திக்குமாற்றலை விருத்தி செய்தல்

119 பின்வரும் அ நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள நீதி நிறுவனங்களுடன் ஆ நிரலில் தரப்பட்டுள்ள வழக்கு நடவடிக்கைகளை வரிசையொழுங்கில் சரியாகப் பொருத்தும் போது பெறப்படும் விடையைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1 உயர் நீதிமன்றம் | A பொதுமக்கள் பாதகாப்பு தொடர்பான குற்றங்கள் |
| 2 மேன்முறையீட்டு நீதிமன்றம் | B திருமணம் தொடர்பான வழக்குகள் |
| 3 மேல் நீதிமன்றம் | C வருமானம் தொடர்பான வழக்குகள் |
| 4 நீதவான் நீதிமன்றம் | D ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மீதான விசாரணை |
| | E கொலை தொடர்பான வழக்கு |
| | F வர்த்தகப் பிரச்சினைகளைத் தீர்த்தல் |
| | G ஹேபியஸ்கோபூஸ் கட்டளைகளைப் பிறப்பித்தல் |

1 AGBE 2 BDFG 3 DGEA 4 GEFD

120 பின்வருவன வளி மாசடையும் வழிமுறைகள் சிலவாகும்

A – எரிமலை வெடிப்பு B – போக்குவரத்து நடவடிக்கைகள்

C – தூசுப்படலம் D காட்டுத் தீ E – ஆகாய விமானப் பயன்பாடு

மேற்கூறப்பட்ட முறைகளில் இயற்கையான வழிமுறைகள் மட்டும் அடங்கிய விடையைத் தெரிவுசெய்க.

1 ABE 2 ACD 3 BCE 4 CDE

**2019**

121 பின்வருவனவற்றுள் சனநாயக ஆட்சிமுறையொன்றின் சிறப்பியல்பு எது?

1 அரசியல் கட்சிகள் மாறி மாறி நாட்டை ஆட்சி செய்தல்

2 மக்கள் குழுக்களின் கருத்துக்களுக்கேற்பத் தீர்மானங்களை எடுத்தல்

3 ஆட்சியில் பங்குபற்றுவதற்கான உரிமை மக்களுக்கு இருத்தல்

4 கல்விக்கும் சமூக நலனோம்பல்களுக்கும் முன்னுரிமை வழங்குதல்

122 சூழல் உரிமைகள் பற்றிய பிரச்சினைகளின் போது நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய முக்கிய நிறுவனம் எது

1 சுற்றாடல் அமைச்சு 2 மத்திய சுற்றாடல்அதிகார சபை

3 வனப் பாதுகாப்புத் திணைக்களம் 4 புவியியல் மற்றும் சுரங்கமறுத்தல் அலுவலகம்

123 பன்மைப் பண்பாட்டுச் சமூகமொன்றில் எதிர்காலப் பிரசைகளிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பின்பற்றத்தக்க வினைத்திறனுள்ள நடவடிக்கையாக அமைவது

1 ஏனையோரின் பண்பாடுகளுக்கு மதிப்பளித்தல்

2 பல்லினக் குழுக்கள் கலந்துள்ள பாடசாலைகளை ஏற்படுத்துதல்

3 பிறமொழிகளைக் கற்பதற்கு ஊக்கமளித்தல்

4 பண்பாட்டுப் பல்வகைமையை ஏற்படுத்துதல்

124 அரசியலமைப்புக்கு மேலதிகமாக அவதானிக்கத்தக்க உள்நாட்டுச் சட்டங்களின் வகைகள் இரண்டு

1 கண்டியச்சட்டமும் தேசவழமைச்சட்டமும் 2 குற்றவியல் சட்டமும் சர்வதேசச் சட்டமும்

3 குற்றவியல் சட்டமும் குடியியல் சட்டமும் 4 சிவில் சட்டமும் முஸ்லிம் சட்டமும்

125 பின்வருவனவற்றுள் வாக்காளரின் பொறுப்பை வெளிப்படுத்தும் கூற்றைத் தெரிவுசெய்க.

1 தேசத்தைக் கட்டியெழுப்பக்கூடிய அர்ப்பணிப்பு மிக்க தலைவர்களைத் தெரிவுசெய்தல்

2 புதிய வேட்பாளர்களைப் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்தல்

3 ஏற்புடைய பரம்பரையில் வரும் தலைவர்களுக்கு வாக்களித்தல்

4 அதிகாரத்திலுள்ள தலைவர்களுக்கெதிரான குழுவைத் தெரிவு செய்தல்

126 பிராந்திய அமைப்புக்கள் உருவாகுவதற்கு அடிப்படையாக அமைந்த முக்கிய நோக்கங்கள் இரண்டைத் தெரிவுசெய்க.

1 யுத்தம் சார்ந்த நோக்கங்களும் வர்த்தக நோக்கங்களுமாகும்

2 கல்வி சார்ந்த நோக்கங்களும் நலனோம்பல் நோக்கங்களுமாகும்

3 யுத்தம் சார்ந்த நோக்கங்களும் பொரளாதார ஒத்துழைப்பு நோக்கங்களுமாகும்

4 பொருளாதார நோக்கங்களும் நலனோம்பல் நோக்கங்களுமாகும்

127 கல்துங்கின் மோதல் பற்றிய மாதிரிக்கமைவாக மனப்பாங்கு என்பதனாற் கரதப்படுவத மோதல் உருவாவதில் தாக்கம் செலுத்தும் தரப்பினரின்

1 அரசியற் காரணிகள் 2 பண்பாட்டுக் காரணகள்

3 சமூகவியற் காரணிகள் 4 உளவியற் காரணிகள்

128 பின்வருவனவற்றுள் இலங்கையர்களுக்கு அரசியலில் பங்குபற்றுவதற்கு அதிக வாய்ப்புக்களை வழங்கிய அரசியலமைப்புச் சீர்திருத்தம்

1 சோல்பரி அரசியலமைப்புச் சீர்திருத்தம் 2 மக்கலம் அரசியலமைப்புச் சீர்திருத்தம்

3 மனிங் அரசியலமைப்புச் சீர்திருத்தம் 4 டொனமூர் அரசியலமைப்புச் சீர்திருத்தம்

129 உற்பத்திக் காரணிகளைச் சரியாகக் குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க

1 உழைப்பு, மூலதனம், ஊதியம், நிலம் 2 முயற்சியாண்மை, வட்டி, மூலதனம், உழைப்பு

3 நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சியாண்மை 4 மூலதனம், இலாபம், உழைப்பு, நிலம்

130 நிறைவேற்று மற்றும் நிர்வாகச் செயற்பாட்டினால் பிரசைகளின் அடிப்படை மனித உரிமைகள் மீறல் தொடர்பாக கவனஞ் செலுத்தவதற்காக உருவாக்கப்பட்டுள்ள பதவிநிலை எது?

1 ஓம்புட்ஸ்மன் 2 பிரதம நீதியரசர் 3 சபாநாயகர் 4 சட்டமா அதிபர்

131 பின்வருவனவற்றில் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் அனைத்துவிதமான பராபட்சங்களை இல்லாதொழிக்கும் உடன்படிக்கை (CEDAW) க்கு அமைய பெண்களுக்குரித்தான உரிமைகளுள் அடங்காதது

1 கல்விக்கும் பயிற்சிக்குமான உரிமை

2 சமூகப் பாரபட்சங்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை

3 சுகாதாரத்திற்கும் போசணைக்குமான உரிமை

4 திருமணம் முடிப்பதற்கும் தொழில் புரிவதற்குமான உரிமை

132 இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்களில் தற்போது பயன்படுத்தும் பிரதிநிதித்துவ முறை எது?

1 எளிய பெரும்பான்மை 2 விகிதாசார 3 சமாந்தர 4 மாவட்ட

133 மத்திய அரசின் அதிகாரங்களை அரசியலமைப்பின் மூலம் பிராந்திய அரசாங்கங்களுக்கு ஒப்படைத்தல் எப்பெயரால் அழைக்கப்படும்

1 அதிகாரப் பகிர்வு
2 அதிகார ஒருமுகவாக்கம்
3 அதிகார விரிவாக்கம்
4 அதிகார பன்முகப்படுத்தல்

134 பின்வருவனவற்றுள் சமூகமொன்றில் பண்பாடு என்பதைத் தெளிவுறுத்தும் கூற்று எது?

1 சமூகத்தில் வழக்காறுகளுக்கிணங்க செயற்படல்
2 சமய நம்பிக்கைகளுக்கமைய பல்வேறுபட்ட வழிபாடுகளைப் பின்பற்றல்
3 சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாழ்க்கை முறைகளுக்கேற்பச் செயற்படல்
4 பல்லின மக்கள் ஒன்றாக வாழ்தல்

135 சமஷ்டி அரசொன்றின் முக்கிய பண்பாக அமைவது

1 மத்திய அரசாங்கத்தினால் ஆட்சி செய்யப்படுதல்
2 அதிகாரங்கள் பகிரப்பட்டிருத்தல்
3 அதிகாரங்களை மீளப்பெற முடியுமாயிருத்தல்
4 மேல்சபை ஒன்று காணப்படுதல்

136 அபிவிருத்திச் செயன்முறையின்போது முகங்கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு நாடு எடுக்கக்கூடிய வினைத்திறன் வாய்ந்த நடவடிக்கையாவது

1 ஏற்றுமதிப் பன்முகப்படுத்தலை ஊக்குவித்தல்
2 வெளிநாட்டுக் கடன்களை ஊக்குவித்தல்
3 மூளைசாலிகள் வெளியேற்றத்தை ஊக்குவித்தல்
4 சர்வதேச ஊழியச் சந்தையை ஊக்குவித்தல்

137 1945யூன் 26ஆம் திகதி உலகின் அனைத்துப் பிரசைகளுக்கும் முக்கியத்துவமிக்கதாக அமைந்தமைக்கான காரணி யாது

1 இரண்டாம் உலக மகாயத்தம் நிறைவுற்றமை
2 ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கை பிரகடனப்படுத்தியமை
3 சிறுவர் உரிமைகள் சாசனம் பிரகடனப்படுத்தப்பட்டமை
4 சர்வதேச மினத உரிமைகள் பிரகடனம் பிரகடனப்படுத்தப்பட்டமை

138 அரசியல் விழிப்புணர்வு மிக்க மக்கள் ஒர நாட்டில் வாழ்வதால்

1 தனியாள் ஆற்றல்களை மேம்படுத்தலாம்
2 அரசாங்கத்தின் செளற்பாடுகளை விமர்சிக்கலாம்
3 எதிர்க்கட்சிகளின் மக்கள் விருப்பை அதிகரிக்கலாம்
4 மக்களுக்கு நேசமான அரசாங்கமொன்றை உருவாக்கலாம்

139 காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விரும்பத்தகாத விளைவொன்று யாது

1 வெப்பநீரோட்டம் தூண்ப்படுபதல் 2 அமிலமழை பொழிதல்

3 மழைவீழ்ச்சி செயன்முறையில் மாற்றம் ஏற்படல் 4 மூடுபனி ஏற்படுதல்

140 குற்றவியல் சட்டத்திறகிணங்க தண்டனைக்குரிய குற்றங்களை மட்டும் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.

1 அரசுக்கெதிரான செயல், கொலை, கற்பழிப்பு

2 கொலை, சிறுவர் துஷ்பிரயோகம், விவாகரத்து

3 வணிகச் செயற்பாடுகள், கொள்ளை, பாலியல் குற்றம்

4 கற்பழிப்பு, பொதுச்சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல், காணிப்பிணக்கு

141 பின்வருவனவற்றுள் பாடசாலை அங்கத்தவரென்ற வகையில் உங்களால் அற்றப்பட வேண்டிய மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கடமையாவது எது

1 தினமும் பாடசாலைக்கு நேரத்திற்குச் சமூகமளித்தல்

2 வகுப்பிலுள்ள மாணவர்களுக்கு கற்பதற்கு உதவுதல்

3 கல்விச் செயற்பாடுகளின் நன்கு பங்கெடுத்தல்

4 பாடசாலைகளின் சட்டதிட்டங்களைப் பின்பற்றல்

142 சனநாயக சமூகமொன்றில் அரசினால் நிறைவேற்றப்படவேண்டிய கடமையொன்றைக் குறிப்பிடும் கூற்றைத்தெரிவுசெய்க

1 சமூகத்தின் பழக்கவழக்கங்களுக்கு மதிப்பளித்துச் செயற்படுதல்

2 நிறைவேற்றுத்துறையுடன் ஒத்துழைத்துச் செயற்படுதல்

3 உரிய காலத்தில் தேர்தல்களை நடாத்ததல்

4 சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்தல்

143 சளச்சமமின்மை என்பதனாற் கருதப்படுவது

1 உலகில் வளங்களின் பரம்பலில் காணப்படும் சமமின்மையாகும்

2 உலகில் வளங்களுக்கு நிலவும் தட்டுப்பாடாகும்

3 வளங்கள் சமமாகப் பரம்பிக் காணப்படலாகும்

4 வளங்கள் ஓரிடத்தில் குவிந்திருத்தலாகும்

144 பின்வருவனவற்றுள் நல்லாட்சி நிலவும் நாடொன்றின் அடிப்படை இயல்புகளில் ஒன்று அல்லாதது எது

1 சுதந்திரமும் நீதியம் உறுதிப்படுத்தப்படல்

2 உரிமைகளைப் பாதுகாத்தலும் உறுதிப்படுத்தலும்

3 ஊடகச் சுதந்திரத்தைப் பாதகாத்தல்

4 நட்டத்தில் இயங்கிவரும் நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்தல்

145 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட முக்கிய மாற்றமாவது

1 நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவினை ஏற்படுத்தியமையாகும்

2 ஆளுநர் நாயகம் பதவியை இல்லாதொழித்தமையாகும்

3 இலங்கையைச் சுதந்திர அரசாக்கியமையாகும்

4 இருசபைகள் கொண்ட பாராளுமன்றத்தை அறிமுகப்படுத்தியமையாகும்

146 உயிரற்ற கூறுகளடங்கிய சோடிப்பதத்தைக் காண்பிக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க

1 வளிக்கோளம், தாவரங்கள் 2 காலநிலை, மண்

3 பாறைகள், நுண்ணுயிர்கள் 4 காலநிலை, நுண்ணுயிர்கள்

147 உலகமயமாக்கலுக்கு முகங்கொடுப்பதற்காக அமைக்கப்பட்ட வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கட்படம் (NAFTA) நாடுகளைக் கொண்டுள்ள விடை எது

1 டென்மார்க், ஐக்கிய அமெரிக்கா, லக்சம்பேர்க்

2 இந்தியா, ஸ்பானியா, ஐக்கிய அமெரிக்கா

3 ஐக்கிய அமெரிக்கா, கனடா, மெக்சிக்கோ

4 ஐக்கிய அமெரிக்கா, நெதர்லாந்து, இத்தாலி

148 நாடொன்றின் உற்பத்திச் செயன்முறையில் நிகழும் அடிப்படைச் செயற்பாடுகளைக் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.

1 உற்பத்தி, கொள்வனவு, நுகர்வு 2 உற்பத்தி, விநியோகம், நுகர்வு

3 உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், நுகர்வு 4 உற்பத்தி, பொதியிடல், நுகர்வு

149 மேற்கு நாடுகள் வலுவான தேசிய அரசுகளாக எழுச்சியடைந்தமைக்கான முக்கிய காரணியாவது

1 சமூக நலனோம்புகையை கட்டியெழுப்புதல் 2 மானியமுறையைப் பேணுதல்

3 மனித உரிமைகளைப் பாதுகாத்தல் 4 தெசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பல்

150 ஒற்றையாட்சி முறையில் அவதானிக்கத்தக்க இயல்பாவது

1 மேற்சபையொன்று காணப்படல் 2 இறைமையதிகாரம் மத்திய அரசிடம் காணப்படல்

3 நிறைவேற்றுத்துறையானது சட்டத்தறையினால் தெரிவுசெய்யப்படல்

4 பிராந்திய அதிகாரங்களுக்கு அதிகாரம் காணப்படல்

151 சனநாயக நாடொன்றில் அரசியலமைப்பிற்கிணங்க செயற்படுவதால் ஏற்படும் பயன்யாது

1 அரசாங்கத்தின் உறுதிப்பாடும் முறையான நிர்வாகமும் பாதுகாக்கப்படல்

2 தகவலறியும் உரிமை காணப்படல்

3 மக்கள் தமது கருத்துக்களை அரசாங்கத்திடம் முன்வைக்கக் கூடியதயிருத்தல்

4 பொருளாதாரத்தின் பயன்கள் அனைவருக்கும் உரித்தாதல்

152 அடிப்படை உரிமை என்பதனாற் கருதப்படுவது

1 மனிதர்கள் அத்தியாவசியமாகப் பெற்றிருக்க வேண்டியதெனக் கரதப்படும் உரிமைகளாகும்

2 சர்வதேச ரீதியாக உடன்படிக்கைகளின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளாகும்

3 சனநாயக சமூகத்தில் மக்கள் ஏற்றுக்கொள்ளும் உரிமைகளாகும்

4 மனித உரிமைககளில் நாடொன்றின் அடிப்படைச் சட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உரிமைகளாகும்

153 சூழலிலிருந்து கிடைக்கும் சேவையில் வாழ்க்கைக்கு உதவும் சேவைகளை மட்டும் கொண்டுள்ள விடையைத்தெரிவுசெய்க.

1 நிலம், உயிர்ச்சுவட்டு எரிபொருள் 2 சூரியஒளி, நீர்

3 நீர், நிலம் 4 உயிர்ச்சுவட்டு எரிபொருள்,சூரியஒளி

154 முரணாண நடத்தையுள்ள நபர்களால் உருவாகக்கூடிய நிலைமைகள் சில கீழே தரப்பட்டுள்ளன

A முன்கோபம் அடிக்கடி ஏற்படல் B நண்பர்களுடன் அடிக்கடி மோதல் ஏற்படல்

C தனியாளில் மனஅழுத்தம் ஏற்படல் D அயலவருடன் மோதல் ஏற்படல்

மேற்கூறப்பட்டவற்றுள் சமூக சூழ்நிலைகளைக் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க

1 AC 2 BC 3 BD 4 AD

155 நாட்டின் எல்லையை ஐ அடிப்படையாகக் கொண்டு மோதல் உருவாகியுள்ள அரசு

1 அயர்லாந்து 2 இஸ்ரேல் 3 சிரியா 4 ருவாண்டா

156 சர்வதேச உறவுகளின் வளர்ச்சியில் தற்காலத்தில் அவதானிக்கத்தக்க போக்கினை உள்ளடக்கிய விடை எது

1 வர்த்தகம் மற்றும் பண்பாட்டுத் தொடர்பு 2 வர்த்தகம் மற்றும் கல்வித் தொடர்பு

3 பண்பாட்டு மற்றும் இராஜதந்திரத் தொடர்பு 4 தொழினட்ப மற்றும் கல்வித் தொடர்பு

157 பின்வரும் அ நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைபப்புச் சீர்திருத்தங்கள் ஆ நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றங்களுடன் சரியாகப் பொருந்தும் விடையைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| 1 சோல்பரி (1947) | A மந்திரிசபை ஆட்சிமுறையை அறிமுகஞ்செய்தல் |
| 2 முதலாம் குடியரசு(1972) | B நிறைவேற்றுக் குழுமுறை தாபிக்கப்படல் |
| 3 இரண்டாம் குடியரசு (1978) | C அரசியலமைப்பு நீதிமன்றம் நிறுவப்படல் |
| | D சமூககங்களுக்கேற்ப பிரதிநிதிகள் நியமிக்கப்படல் |
| | E விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை அறிமுகஞ் செய்தல் |

1 ABC 2 ACE 3 ACE 3 ABE 4 ADE

158 இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளைச் சரியாகக் காட்டும் விடை யாது

1 சூழல் பாதுகாப்பு, வீதிப் பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம்

2 பொது உபயோகச் சேவைகள், வாகன உரிமம், வரிவிதிப்பு

3 பொதுச்சுகாதாரம், பொதுவீதிகள், பொதுஅமைதி

4 பொதுவீதிகள், பொதுச்சுகாதாரம், பொதுஉபயோகச் சேவைகள்

159 பின்வருவனவற்றுள் சட்டமா அதிபரின் அதிகாரங்களுக்கு உட்படுபவை யாவை

1 நீதித்துறை தொடர்பான சட்டங்களைப் பிறப்பித்தலும் திருத்தியமைத்தலும்

2 போதிய சாட்சிகள் இல்லாதவிடத்து குற்றவாளிளை விடுவிக்கும் அதிகாரம்

3 பல்வேறு சட்டங்களையும் விதிகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும் அதிகாரம்

4 பல்வேறு நீதித்துறை நிறுவனங்களுக்கான நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம்

160 A.B ஆகிய கூற்றுக்களை கருதுக.

A – மனிதன் தனது பொருளாதாரக் கருமங்களை மேற்கொள்கையில் இயற்கை வளங்களையும் வரையறையின்றிப் பயன்படுத்தியுள்ளான்.

B - சூழலின் சமநிலை தகர்வுறுவதால் சூழற் பிரச்சினைகள் தோன்றுகின்றன

மேற்படி கூற்றுகளுள்

1 A உண்மையாவதுடன் B பொய்யானதாகும்

2 A பொய்யாவதுடன் B உண்மையானதாகம்

3 A,B இரண்டும் உண்மையானவையாகும்

4 A,B இரண்டும் பொய்யானவையாகும்.